[2006 ஆகஸ்ட் 4

2—

கட்டட வசதி

*55–**திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூரில் கருவூலத்திற்கென தனியாக புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதியமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர், சார்நிலைக் கருவூலத்திற்கென தனியாக புதிய கட்டடம் கட்டத் தேவைப்படும் 8 சென்ட் நிலத்தினை, மேலூர் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் ஒதுக்கீடு செய்ய, தேவையான கருத்துரு, சென்னை, வருவாய் நிர்வாக ஆணையரின் பரிந்துரைக்காக அனுப்பப்பட்டுள்ளது. அந்த இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன், மேலூர் சார்நிலைக் கருவூலத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது கருதப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், மேலூர் தொகுதியில் உள்ள கருவூலம், ஓட்டுக் கொட்டகையில் இயங்கி வருகின்றது. புதிய கட்டடம் கட்டுவதற்குத் தேவையான இடம், அங்கேயே இருப்பதாக அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு இருக்கிறது. அந்த இடத்தைக் கட்டடம் கட்டுவதற்கு ஒதுக்கி, நிதி ஒதுக்கீடு செய்து, இந்த ஆண்டே மேலூர் தொகுதியில் உள்ள—மேலூர், தாலுகா அலுவலகத்தில் இருக்கின்ற—கருவூலத்திற்குப் புதிய கட்டடமாக இந்த நிதி ஆண்டிலே கட்டித் தரப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே துறையாக இருந்தால்கூட நிருவாக வேறுபாடுகள் இருப்பது காரணமாக, ஒரு துறை இன்னொரு துறையினிடத்திலே அனுமதி பெற்றுத்தான் அந்த இடத்திலே கட்டடம் கட்ட வேண்டியிருக்கிறது. அதுவும் நிருவாக ஆணையருடைய அனுமதி கிடைத்தவுடன், கட்டுவதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

2006 ஆகஸ்ட் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. துரைராஜ்.

திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் சேடப்பட்டி தொகுதி, பேரையூரில் உள்ள கருவூலம், வாடகைக் கட்டடத்தில் சுமார் 10 ஆண்டுகளுக்குமேல் செயல்பட்டு வருகிறது. அதற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அரசு, முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்கு ஒரு தனிக் கேள்வி போட முன்வருவாரா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

3—

பேருந்து வசதி

***650—திருமதி பி. பத்மாவதி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலத்திலிருந்து சென்னை சென்று வர, அரசு விரைவுப் பேருந்தினை இயக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் நாகப்பட்டினத்திலிருந்து சென்னைக்கு, நன்னிலம் வழியாக இயக்கப்பட்டு, பின்னர் நிறுத்தப்பட்ட பேருந்தை அக்கழகத்தால் மீண்டும் இயக்க, திட்டம் ஏதுமில்லை. எனினும், சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளினைப் பூர்த்தி செய்யும்விதமாக, கும்பகோணம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் மூலம் ஒரு சொகுசுப் பேருந்து நன்னிலத்திலிருந்து சென்னைக்கு 15–7–2006 முதல் இயக்கப்பட்டு வருகிறது.